தமிழ்நாடு வளர்ச்சிக்கான நிதி வழங்கவில்லை:

மோடி - அமித்ஷா தமிழ்நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் போல வந்து செல்கின்றனர்!

நிலக்கோட்டை தேர்தல் பரப்புரையில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

திண்டுக்கல், ஏப். 4–

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் நாகஜோதியை ஆதரித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நிலக்கோட்டை பேருந்து நிலையம் அருகே மக்களை சந்தித்து திராவிட மாடல் அரசின் சாதனைகளையும், ஆட்சி அமைய உள்ள திராவிட மாடல் 2.0 அரசின் திட்டத்தையும் எடுத்துரைத்து தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்.

இதில், திமுக துணைப் பொதுச் செயலாளர் ஐ.பெரியசாமி, திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய கனிமொழி கருணந்தி எம்.பி.: நம்முடைய வேட்பாளர் நாகஜோதி தொடர்ந்து மக்களோடு பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய ஒருவர். அவரை எதிர்த்து நிற்கக்கூடிய வேட்பாளர் மக்களை சந்தித்ததே கிடையாது. சட்டமன்றத்துக்கு போவார்கள், அதைத் தாண்டி மக்களை சந்திப்பதில்லை. மக்களுடைய குறைகளை தீர்த்து வைக்கக்கூடிய வேட்பாளர் நாகஜோதி.

இஸ்லாமியர்களுக்கு எதிரான சிஏஏ சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது அதை எடப்பாடி பழனிசாமி ஆதரித்தார். அதற்குப் பிறகு நாடாளுமன்ற தேர்தல் வந்தபோது அந்த கூட்டணியிலிருந்து விலகினார். அப்போது நான் பண்ணியது மிகப் பெரிய தப்பு. இனிமேல் பாஜகவோடு எனக்கு ஒட்டுமில்லை, உறவும் இல்லை என்று மிகப் பெரிய பிரகடனமாகச் சொன்னார். சொல்லி, இப்போது மறுபடியும் பாஜகவோடு, மோடியோடு கூட்டணி வைத்திருக்கிறார்.

நீங்கள் கூட்டணியில் இருந்த காலத்துல் சிஏஏக்கு எதிராக போராடின அத்தனை பேர்மேலும் கேஸ் போட்டீர்கள். வழக்கு போட்டு தடியடி நடத்தியவர் எடப்பாடி பழனிசாமி தான். ஆனால், அப்போது "யாரோட நாங்க கூட்டணி வைத்தது தப்பு" என்று சொன்னவர், இன்னைக்கு அதே மேடையில் நின்று கைகோர்த்துக் கொண்டு, அந்த பாஜக கூட்டணியில் தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டிருக்கக்கூடிய, மாற்றி மாற்றிப் பேசிக் கொண்டிருக்கக்கூடிய எடப்பாடி பழனிசாமிக்கு சரியான பாடத்தை புகட்ட வேண்டும்.

எதை எதிர்த்து மக்களுக்கு எதிரா எதை கொண்டு வந்தாரோ, தமிழ் நாட்டு மக்களுடைய பெருமையை சொல்லக்கூடிய கீழடி, அந்த கீழடி ஆய்வறிக்கையை கொடுத்தால் பிஜேபி சொல்லுதோ இல்லையோ பிஜேபி கேக்குறமாதிரி அந்த ரிப்போர்ட்டை மாத்திக்கொடுங்க, அறிக்கையை மாத்திக்கொடுங்க அப்படின்னு சொல்லக்கூடிய,

சொல்லிக்கொண்டிருக்கக்கூடியவரு தான் பழனிசாமி.

தமிழ்நாட்டு மக்களுடைய பெருமையை சொல்லக்கூடிய கீழடி. அந்த கீழடி ஆய்வறிக்கையை கொடுத்தால், பாஜக கேக்கிற மாதிரி அந்த அறிக்கையை மாற்றிக் கொடுக்க சொல்லக்கூடியவர் தான் பழனிசாமி.

நாடாளுமன்றத்தில் 100 நாள் வேலைத் திட்டம், மகாத்மா காந்தி ஊர்க் வேலை உறுதித் திட்டம் ஆகிய வற்றை, கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு நூறு நாளுக்கு வேலை கிடைக்கச் செய்யும் நோக்கில் கொண்டுவரப்பட்டது. அதை இன்னைக்கு பிஜேபி ஒழிக்கக்கூடிய வகையில் மாற்றி, மகாத்மா காந்தி பேரையும் எடுத்திட்டு, விபி ஜி ராம் ஜி என்று மாற்றி விட்டனர்.

எந்த மகாத்மா காந்தி தன்னுடைய இறுதி மூச்சிருக்கும் வரை எந்த ராம் என்ற பேரை உச்சரித்துக்கொண்டிருந்தாரோ? அவருடைய பேரை எடுத்துட்டு எந்த ராம கொண்டு வந்தாங்கன்னு தெரியவில்லை? மகாத்மா காந்தி அவர்கள் வழிபட்ட அந்த ராம் பெயர, இல்லைன்னா மகாத்மா காந்தியை கொன்ற ராம் என்ற பேரான்னு தெரியவில்லை. திட்டத்தின் பெயரை மாற்றினாலும், இப்ப நூறு நாள் வேலை யாருக்கும் நூறு நாள் வேலை கிடையாது. இங்க இருக்கக்கூடிய சகோதரிகள், சகோதரர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இதற்கெல்லாம் பதில் சொல்லாமல், தேர்தல் பிரச்சாரத்திற்காக மோடி அவர்களும், அமித்ஷா அவர்களும் தமிழ்நாடு இருக்கு சுற்றுலாப் பயணிகள் போல வந்து செல்கின்றனர், தமிழ்நாடு வளர்ச்சிக்கு என்று எந்த ஒரு நிதியும் வழங்கவில்லை. இதுகுறித்து எடப்பாடி பழனிச்சாமி இது வரை வாய் திறக்கவில்லை.

சிலிண்டர் தட்டுப்பாட்டிற்கு எந்த முன்னேற்பாடும் ஒன்றிய அரசு செய்யவில்லை; பல நிறுவனங்கள், உணவகங்கள், சாலையோர உணவகங்கள் மூடப்பட்டு, அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் துரோகம் இழைத்தவர்கள் இவர்கள், இவர்களின் கூட்டணி துரோக கூட்டணியை உருவாக்கியுள்ளனர். தன்னுடைய கட்சியில் வளர்ந்த அனைவரையும் கட்சியை விட்டு அனுப்பிவிட்டு தான் மட்டும் இருக்க வேண்டும் என நினைப்பவர் தான் எடப்பாடி பழனிசாமி.

திமுக அரசின் சாதனைகளை பட்டியலிட்டால் நீண்டு கொண்டே இருக்கும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மூலம் ஒரு கோடியே 31 லட்சம் மகளிர் பயன்பெற்று வருகின்றனர்,

மகளிர் விடியல் பயணம் மூலம் சராசரியாக ஒரு பெண்மணி 800 முதல் 1000 ரூபாய் வரை சேமிக்கிறார், புதுமைப்பெண், தமிழ் புதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம், இன்னும் இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, முதல்வர் மருந்தகம், காலை உணவு திட்டம் இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம்.

நிலக்கோட்டை தொகுதிக்கான திமுக தேர்தல் வாக்குறுதிகள்

- **வத்தலக்குண்டு டவுன் பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கப் புதிய புறவழிச்சாலை அமைக்கப்படும்.**
- **மேட்டுப்பட்டி பகுதியில் புதிய புறக்காவல் நிலையம் அமைக்கப்படும்.**
- **சின்னாளப்பட்டியில் அரசு நிதி உதவியுடன் நவீனப் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.**
- **நகரின் முக்கிய இடங்களில் பொழுதுபோக்கு பூங்காக்கள் மற்றும் நவீன உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும்.**
- **சீரான மின் விநியோகம் வழங்கப் புதிய மின்சார வாரிய துணை மின் நிலையம் அமைக்கப்படும்.**
- **இளைஞர்களுக்காக முதல்வர் படைப்பகம் தொடங்கப்படும்.**
- **அரசுப் பள்ளிகள் அனைத்திற்கும் ஸ்மார்ட் போர்டு வசதி செய்து தரப்படும்.**

திமுகவில் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும், ஆனால் அவர்களின் வாக்குறுதி என்பது ஒருபோதும் நிறைவேற்றப்படாதது.

நமது தேர்தல் அறிக்கையில், கலைஞர் உரிமைத்தொகை 2000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும், புதுமைப்பெண், தமிழ் புதல்வன் திட்டம் ஊக்கத்தொகை உயர்த்தி வழங்கப்பட உள்ளது,

மகளிருக்கு வீட்டு உபயோக பொருட்கள் வாங்க 8000 ரூபாய் மதிப்பிலான கூப்பன் வழங்கப்படுகிறது, அதை வைத்து அவர்கள் வீட்டு உபயோகத்துக்கு தேவையான எந்த பொருள் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்.

கலைஞர் கொடுத்த தொலைக்காட்சி இன்றும் மக்கள் பயன்பாட்டில் உள்ளது, அவர்கள் கொடுத்த மிக்ஸி, கிரைண்டர் எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை என்று பேசினார்.

சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு புதிய புரட்சிக் கழகம் ஆதரவு!

சென்னை, ஏப். 4- நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, 'புதிய புரட்சிக் கழகம்' ஆதரவு தெரிவித்துள்ளது.

"புதிய புரட்சிக் கழகம்" நிறுவனத் தலைவர் டாக்டர் ஓ.ஈ.சங்கர் அவர்கள், 02.04.2026 காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை நேரில் சந்தித்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் முழு ஆதரவு அளிப்பதாகவும், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற புதிய புரட்சிக் கழகத்தின் நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தார்.

நா.கோதண்டன் தலைமை! இரா.லட்சுமணன் - எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை!

40வது வட்டத்தில் ஜே.ஜே.எபினேசரை ஆதரித்து தேர்தல் பணிமனை!

ஆர்.டி.சேகர் திறந்து வைக்கின்றார்! கலாநிதி வீராசாமி - சுபா.சந்திரசேகர் பங்கேற்பு!

சென்னை, ஏப்.04- சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40வது வட்ட தி.மு.க. சார்பில் தேர்தல் பணிமனை திறப்பு விழா இன்று (04.04.2026 சனிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் 36/21 கிராஸ்ரோடு, புது வண்ணை, செ81ல் நடைபெறுகிறது.

வட்டச்செயலாளர் நா. கோதண்டன் தலைமை வகிக்கிறார். ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ். ஜெபதாஸ்பாண்டியன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இரா.சீமான், எம்.எஸ். ரவி, மு.சா.அரித் குமார், கு. கலா, கே.ஹேமநத்குமார், டி.விஜயகுமார், ஆர். வெங்கட், ஆர்.பத்மநாபன், எஸ்.எம்.முருகன், என். டேனியல், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, தொகுதி பொறுப்பாளர் சுபா. சந்திரசேகர், ஆகியோர் தேர்தல் பணிமனையை திறந்து வைக்கின்றனர்.

ஆர்.வெற்றிவீரன், என். மருதுகணேஷ், நேதாஜி யு.கணேசன், இர.பொன் இளவரசன், வெ.சு. சத்திய நாராயணன், என். அனிபா, ஆர்.டி. ராஜா, கே.பாலு, எம். வேதலட் சுமி, கே.பி. சதீஷ்குமார், மா. நாகராஜன், என்.எம். கதிரேசன், தா.வ.மு. கஜேந்திரன், ப. குமார், ச. தமிழ்ச்செல்வன், பொ.து. ராஜா, ஜெ. பிரேம்ஆனந்த், எம். மோகன்குமார், ஏ. சயத், ஆர்.ராமசந்திரன், பி.அப்பாஸ், கே.பி.பாரதி ராஜா, ஆர்.அறிவழகன், க.ஜெகன், மு.ஷாஜான், வி.ரவிகுமார், சி.சேகர், ஆர்.ஜெயசந்திரன், எஸ். மேரி, டி.வெங்கடேஷ், எம். ஜெய்சங்கர், எம். ஜெயராமன், எல்.சிந்தன், எஸ்.சையதுகனி, மஜித் பாய், சாதிக், ஏ.அயுப் கான், காஜாமொய்தீன், ஏ.பாபு, ஜவரங்கீர், பாபா கே.ஜெகன், சத்திய மூர்த்தி,

எம்.எம்.சாமி, டி.ஆர். தணிகாசலம், பா. கோதண்டன், என்.பிரேமராசன், எஸ்.கிறிஸ்தவராஜ், பிராங்கிளின், கே.முத்தமிழ்செல்வன், ஊடகம் ராஜ்குமார், மா.பாஸ்கர், ஆர். கிருஷ்ணன், டி.கணேசன், பி.பாலன், கோ. தமிழ்ச் செல்வன், க.நரேஷ்குமார், எஸ். கலைச்செல்வி, கே. ஜானகி, எஸ். புவனேஸ்வரி, பி.நபிஷா, டி.எல்.பி. ரவி, எஸ்.துரை, எ. கருணாகரன், எஸ். கிருஷ்ணசாமி, டி. மனோகரன், எஸ். நடராஜன், எம். பூபேஷ், டி.வெங்கடேசன், கோ. பிரேம்குமார், ஆர். லெனின்குமார், எ. ஸ்ரீதர், ஜி.மைக்கேல், எஸ்.மஞ்சு, எஸ்.மகிமை ராஜ், எஸ். பழனி, இ. வேலு, என்.லலிதா, கு. மனோ, எம்.மூர்த்தி, கே.கார்த்திக், எச். மாரி முத்து, எஸ். சித்ரா, ஏ. வசந்தி, ஆர். கதிரேசன், எஸ். கோமளா, ஆர்.கே. யோகானந்தம், பூக்கடை சீனி, பேனர் சரவணன், டிபன் கடை மணி, பிரியா, மணிகண்டன், செல்வம், ஞானபிரகாசம், விக்னேஸ்வரன், ரூபன், சாமுவேல், இஸ்ரேல் மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் வி.ஜி. ராஜேந்திரன்,கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் மாவட்ட அவைத் தலைவர் திராவிட பக்தன், தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர் கா. அரிகிருஷ்ணன் முன்னிலையில் வீதி வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பொதுமக்கள் ஆர்த்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர். டி. இ.ஆதிசேஷன், ஒன்றிய செயலாளர்கள் பிரகாஷ் ஞான ஒளி, மோ. ரமேஷ், ஒன்றிய நிர்வாகிகள் பி.கே.நாகராஜ், கே.மதியழகன், பி.ஆர்.பிரபாகரன், சி.ஆர்.குமரன், நந்தகோபால், கொப்பூர் திலீப், செங்குட்டவன், மோகனசுந்தரம், சத்யா, வாசு, ராம்கி, கார்த்தி, பி.பரந்தாமன் உள்ளிட கழக நிர்வாகிகள் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

ஐட்ரீம் இரா.மூர்த்தி தலைமை ! இரா.செந்தில்குமார் - வ.பெ.சுரேஷ் முன்னிலை !

இராயபுரம் வேட்பாளர் அ.சுபேர்கானை ஆதரித்து தொகுதி தேர்தல் பணிமனை!

ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி திறந்து வைக்கின்றனர்!

சென்னை, ஏப்.04- மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி இராயபுரம் வேட்பாளர் அ.சுபேர்கான் அவர்களை ஆதரித்து தொகுதி தேர்தல் பணிமனை திறப்பு விழா இன்று (04.04.2026 சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் மேற்கு கல்மண்டபம் சாலை, 49(அ) வட்டம் இராயபுரத்தில் நடைபெறுகிறது.

ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, தலைமை வகிக்கிறார். இராயபுரம் பகுதிச் செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

த.ஜெயபாலன், எம். கே.இஸ்மாயில், கு.சுந்தர், சு.திருஞானம், பி.ஜெயலட்சுமி, வி. மலையம்மாள், லோ.மோகன், இ.மதன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் தொகுதி தேர்தல் பணிமனையை திறந்து வைக்கின்றனர்.

தா.இளையஅருணா, பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன், மதாரம்மா கனி பாரூக், சிவ.பேரறிவாளன், எம்.செந்தில்குமார், சு.ஜீவன், எல்.சுந்தர்ராஜன், கு.வேம்புலி வெங்கடேசன், கமுதி சம்சுதின், இராயபுரம் அலி, கே.அல்லாபகஷ், டி.மாறன், கோல்டு ரஃபி, லார்டு பாஸ்கர், முகமது பாரூக், மு.கோபி, க.நாகம்மை, வே.சிவக்குமார், சு.சேகர், கி.ராஜேந்திரன், நா.சண்முகம், வி.விஜயலட்சுமி விஜயகுமார், ஆர். சுரேஷ்குமார், கீதாசுரேஷ் எம்.சி, பா.வேளாங்கண்ணி எம்.சி, லயோலா கே.மதன், கட்டீஸ் ப.சோமசுந்தர மூர்த்தி, கார்த்திக் செங்குட்டுவன், பி.செந்தில்கு மார், லியோ டி.சுரேஷ், எம்.தீனதயாளன், ஆர்.வி.லட்சுமி வேலு, இரா.பாலன், எம். எல்.ரவி, க.கலைச்செல்வன், காட்டன் ஜி.சதிஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், வி. கண்ணன், எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், எல். பாலாலட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், எஸ். சரேஷ், எம்.என்.வெங்கட், எல்.சீனிவாசன், அத்தோ பி.முனுசாமி, வி.குமார், ஜஹிஎப்.பழனி, என்.பாரி, கே.லட்சுமணன், இரா. பொன்முடி, எஸ்.யுவராஜ், இரா.ஜெய்சங்கர், பிரியாணி பாலா, முகமது மொய்தீன், ந.குமார், ஏ. அன்வர், பி.பாலாஜி, மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

பி.சேகர், கு.ரமேஷ், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கழக வெற்றி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதியை ஆதரித்து

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் வாக்கு சேகரிப்பு!

ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி அறிக்கை!

சென்னை, ஏப். 04 சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் காரம்பாக்கம் க. கணபதி ஆதரித்து நாளை (05.04.2026 ஞாயிற்றுக்கிழமை) மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, ஒன்றிய கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி தலைமையில் கழக நிர்வாகிகள் வாக்கு சேகரிக்கின்றனர்.

அயப்பாக்கம், இ.சி.ஐ. அந்திரேயா தேவாலயத்தில் ஆர் வினோத், மாறன் குமார் ஆகியோரும், இ.சி.ஐ. மில் தொல்பியா ஆலயத்தில் ஜி.சண்முகம், ஏ.எம்.திலீப் ஆகியோரும், காயத்ரி நகர், இ.சி.ஐ. நிலை வாழ்வு திருச்சபையில் ஏ. எம்.யுவராஜா, சந்தோஷ்குமார் ஆகியோரும், ஐ.பி. எஸ்.சர்ச் பிரிட்டானியா நகர், எம்.வெங்கட் முருகன், சி.டி.பாபு ஆகியோரும், சென்ட் ஆண்டனி சர்ச் ஐயப்பா நகர், டி.சேகர், எஸ்.செல்லதுரை, பி.ஸ்ரீதர் ஆகியோரும்,

அடையாளம்பட்டு, சி.எஸ்.ஐ. சர்ச் க.சங்கர், சகிலா ஆகியோரும், இ.சி.ஐ. சர்ச் ஆர்.கௌரிசங்கர், பிரபாகரன் ஆகியோரும்,

வானகரம் இ.சி.ஐ. கிறிஸ்து நாதர் ஆலயம், பழனியப்பன் நகர் ஜெ.ஜெயச்சந்திரன், என்.ரவி, கு.சதீஷ்குமார் ஆகியோரும், இ.சி.ஐ. தூயலாக தேவாலயம் மேட்டுக்குப்பம் எம்.ஜி.சாமிநாதன், திவ்யகுமரன் ஆகியோரும், இ சி ஐ கிறிஸ்து நாதர் ஆலயம், கணபதி நகர், எஸ். பி.அருள், பர்மன் அலி, தேவராஜ் ஆகியோர் பொது மக்களிடம் ஆதரவு திரட்டுகின்றனர்.

இவ்வாறு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி தெரிவித்துள்ளார்.

திருத்தணி தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் திருத்தணி சட்டமன்ற தொகுதி தே.மு.தி.க வேட்பாளர் டி.கிருஷ்ணமூர்த்தியை ஆதரித்து தேர்தல் களப்பணியாற்றும் விதமாக திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் வழக்கறிஞர்கள் அணியுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பி. கே.நாகராஜ், ஏற்பாட்டில் நடைபெற்றது. இக் இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண், வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.